# தபோவனம்







2 – 3 ஆவணி 2025 நடைபெற்ற நிகழ்வுகள்

# (2.8.2025) சனிக்கிழமை நிகழ்வுகள்

## ❖ கலந்துரையாடல்

**மது மற்றும் போதைப் பொருள் பாவனையை குறைக்க மற்றும் இதனால் சிறுவர்கள் சந்திக்கின்ற பிரச்சனைகளை தடுக்க எடுக்க கூடிய முயற்சிகள் பற்றி கலந்துரையாடப்பட்டது**

நேரம் - காலை 9.30 – 11

இடம் - தபோவன மண்டபம்

கலந்துரையாடலில் கலந்து கொண்டோர் விபரம்

1. வாழ்நாள் பேராசிரியர் தயா சோமசுந்தரம் - தபோவன தலைவர்
2. திரு. தெ. விஜயசங்கர் - தபோவன செயலாளர்
3. திரு. அன்ரன் பிறேம்நாத் - போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்
4. திருமதி. ஜெனனி கபிலன் - சிறுவர்கள் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்
5. திரு. க. சத்தியசீலன் - ஆற்றுகையாளர்
6. திருமதி. த. சுபானுதா – ஆசிரியர், தபோவன ஒழுங்கமைப்பாளர்
7. திருமதி. சா. யசோதரா – ஆசிரியர்

கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

*தற்காலத்தில் மது, போதைப் பொருள் பாவனை அதிகரித்து காணப்படுகின்றது. ஆண்கள், (குடும்பத்தலைவர்கள், வாலிபர்கள்) மற்றும் பாடசாலை மாணவர்கள் மது, போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி அவர்களது வாழ்க்கையை அழிப்பது மட்டுமல்லாமல் குடும்பத்தில் வறுமை, வன்முறை, உறவு சீர்கேடு முதலியவற்றுடன் சமூக பிறழ்வுகள் ஏற்படுகின்றது*

– வாழ்நாள் பேராசிரியர். தயா சோமசுந்தரம்

*நகரத்திலும் பார்க்க கிராமத்திலே மது போதைப்பொருள் பாவனை, சிறுவயது திருமணங்கள், ஒருவர் இன்னொருவரிடம் தங்கி வாழுதல் மற்றும் குடும்பங்களில் நிம்மதியற்ற தன்மை காணப்படுகின்றது*

-திரு. தெ. விஜயசங்கர்

*மேலைத்தேய நாடுகளில் சிறு வயதிலிருந்தே மது, போதைப் பொருள் பாவனையால் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றி கற்பிக்கப்படுகின்றன. இவ்வாறான கல்வி எங்கள் பிரதேசங்களிலும் முன்னெடுக்க வேண்டும்.*

-திருமதி. த. சுபானுதா

*மது, போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகிய சிலர் தங்களுடைய பிள்ளைகளின் நிலைகளை கருத்தில் கொண்டு திருந்தி இன்று மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்கிறார்கள்.*

-திரு. அ. பிறேம்காந்த்

*தற்காலத்தில் மாணவர்களும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி தங்களுடைய நண்பர்களுக்கும் அதனை வழங்குகிறார்கள். இதனை நாம் அறிந்திருப்பின் உரிய அதிகாரிகளிடம் கூறி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.* திருமதி. க. ஜெனனி

*மது, போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகளை சிறுவர்களுக்கு கூறி வளர்க்கும் போது சமூகம் நன்நிலையை அடையும்.* திரு. க.சத்தியசீலன்

கோட்பாடுகள் ரீதியாக அணுகி சிறுவர்களை உள்வாங்கி மது போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகளை பொருத்தமான கலை வடிவங்கள் ஊடாக மக்களுக்கு அறிவுறுத்துவது உகந்தது

இச்சமூக சிறுவர்கள் வேண்டுவது நல்ல அப்பாவும் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையும் ஆகும். எனவே மது மற்றும் போதைப் பொருள் பாவனையை குறைக்க வெவ்வேறு வழிகளில் முயற்சிகள் எடுப்போம் என அனைவராலும் கூறப்பட்டது.







## ❖ நீச்சல் பயிற்சி

காலை 9.30 –11.45 சமுத்திரவியல் பல்கலைகழக பயிற்றுவிப்பாளர் திரு கிறிஸ்து ராஜா வால் வசதிபடுத்துனர்கள், பெண்கள், ஆண்கள் மற்றும் சமுத்திரவியல் பல்கலைகழக மாணவர்களுக்கான நீச்சல் பயிற்றுவிக்கப்பட்டது.

## ❖ சிறுவர்களின் விளையாட்டுக்கள்

காலை 9.30 – 11 வசதிபடுத்துனர்களின் துணையுடன் காற்பந்து, வலைப்பந்து போன்ற விளையாட்டுக்களை விளையாடினார்கள்.

## ❖ பிறந்தநாள் கொண்டாட்டம்

காலை 11 – 11.15 தபோவன தலைவர் தயா சோமசுந்தரம் அவர்களது பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது






## ❖நாடகப் பயிற்சி

காலை 11.15 – 12 நாடக ஆற்றுகையாளர் திரு. க. சத்தியசீலன் அவர்களால் எமது சிறுவர்களுக்கு நாடகப் பயிற்சி பயிற்றுவிக்கப்பட்டது





## ❖சத்துணவு

சகலருக்கும் சத்துணவாக அவித்து தாளித்த கொண்டகடலை மற்றும் கேசரி வழங்கப்பட்டது

# (3.8.2025) ஞாயிற்றுக்கிழமை நிகழ்வுகள்

## ❖ பியானோ வகுப்புக்கள்

மாலை 4 – 5.30 தபோவன சிறுவர்களுக்கான பியானோ வகுப்புக்கள் அல்லைப்பிட்டி செல்வி நிசாலினி என்பவரால் பயிற்றுவிக்கப்பட்டது இதில் 10 – 13 வயதிற்குட்பட்ட 9 மாணவரகள் பங்குபற்றினர்.









# நன்றி

